பக்கங்கள் 23+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 19 புதன்கிழமை 05.11.2025 | அதிர்வு 99

## கொழுந்து அரைக்கும் இயந்திரத்தில் சிக்கி தொழிலாளி மரணம்!

(எஸ்.பெருமாள்)

மஸ்கெலியா, மவுசா கலை தோட்ட தேயிலை தொழிற்சாலையில் இன்று அதிகாலை



05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டுடன்

# ‘சங்கு’ இணங்கி வந்தால் மீண்டும் கூட்டமைப்பாகச் செயற்பட முடியும்

### வவுனியாவில் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் சுமந்திரன் இப்படி தெரிவிப்பு

(கி.வசந்தன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் அதற்கு இணங்கி வந்தால் மட்டும் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட முடியும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

06




# மன்னாரில் போராட்டம் தொடரும்!

## மாக்கஸ் அடிகளார் அறிவிப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

“மன்னாரில் காற்றாலைக்கு எதிரான எமது போராட்டத்தின் ஊடாக எமது குரலுக்குச் செவிசாய்த்த ஜனாதிபதிக்குப் போராட்டக் குழு சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எனினும், எமது மூன்று கோரிக்கைகளையும் அவர் விரைவில் ஏற்றுக்கொள்வார் என நம்பி எமது போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம்.”

05





# மாபெரும் சுனாமி ஒத்திகை நிகழ்வுகள் வடமராட்சியில்!

**(பூ.லின்ரன்)**

இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் முன்னாயத்த நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பிராந்திய நாடுகளுக்கான சுனாமி ஒத்திகைப் பயிற்சி இன்று (05) புதன்கிழமை காலை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் இடம்பெற்றது.

காலை 9:15 மணியளவில் சுனாமி எச்சரிக்கை ஒலி ஒலிக்கப்பட்டதை தொடர்ந்து மாணவிகள் வகுப்பு, வகுப்பாக அணிவகுத்து அறிவுறுத்தல்களுக்கு அமையச் செயற்பட்டனர்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இடைத்தங்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அங்கு மருத்துவ வசதிகள், உணவு, உட்பட பல்வேறு வசதிகளும் ஏற்படு செய்யப்பட்டிருந்தன. வட இந்து மகளிர் கல்லூரியில் வகுப்பு வகுப்பாக மாணவர்கள் பிரிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டதுடன் கிராம மக்களும தங்கவைக்கப்பட்டனர்.

பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழுவினரால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே மாணவர்கள், கிராம மக்கள் தங்க வைக்கப்பட்டனர்.

இதேவேளை, ஒத்திகையின்போது பாதுகாப்பாக நகர்ந்த மக்கள், மணவர்களில் ஒரு சிலருக்குக் காயங்கள் ஏற்பட்டன. காயமடைந்தவர்களை

தொடர்ச்சி▼









# மாபெரும் சுனாமி ஒத்திகை நிகழ்வுகள் வடமராட்சியில்!

தொடர்ச்சி▲

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சென் ஜோன்ஸ் ஆம்புலன்ஸ், பருத்தித்துறை பொலிஸார் ஆகியோர் ஏற்றி வந்து வட இந்து மகளிர் கல்லூரியல் ஏற்பாடு செய்யப்பட்ட முதலுதவி சிகிச்சை நிலையத்தில் சிகிச்சையளித்தனர்.

இந்த ஒத்திகை நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சென் ஜோன்ஸ் ஆம்புலன்ஸ் படைப்பிரிவு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை பொலிஸார், கடற்படை, இராணுவம், சிறப்பு அதிரடி படை, பருத்தித்துறை நகர சபை தவிசாளர் மற்றும் உப தவிசாளர், கியூமெடிக்கா உட்பட பல்வேறு அமைப்புக்கள், திணைக்களங்கள் பங்குபற்றியிருந்தன.

இந்த ஒத்திகை நிகழ்வில் சுமார் 500 வரையான வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவர்கள், 250 பேர் வரையான பொது மக்கள் கலந்து கொண்டனர்.



















# யாழ்ப்பாணத்தில் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் அட்டகாசம்

## ஓட்டோவும் தீக்கிரை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் வீடொன்றினுள் புகுந்து வன்முறைக் கும்பல் ஒன்று வீட்டுக்குத் தீ வைத்ததுடன், வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவுக்குத் தீ வைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

சுன்னாகம் பகுதியில் உள்ள வீடொன்றினுள் இரவு அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பல் வீட்டினுள் நுழைந்து பொருட்களை அடித்து உடைத்து, அவற்றுக்குத் தீ வைத்து, வீட்டில் இருந்தோரை அச்சுறுத்திய பின்னர், வீட்டின் வெளியே நின்ற ஓட்டோவுக்கும் தீ வைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோ முற்றாகத் தீக்கிரையாகியுள்ளது.சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.















# வவுனியாவில் 12 மாணவர்கள் குளவித் தாக்குதலுக்கு இலக்கு!

(கி.வசந்தன்)



வவுனியாவில் 12 மாணவர்கள் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மேற்படி மாணவர்கள் வவுனியா வடக்கு ஒலுமடு மகா வித்தியாலத்துக்குச் சென்ற நிலையில் மரத்தில் இருந்த பப்பறக்கொப்பான் குளவிகள் கலைந்து வீதியால் சென்ற மாணவர்கள் மீது தாக்கியுள்ளது.

இதில் பாதிப்படைந்த 12 மாணவர்கள் நெடுங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணத் திரைப்படக்கழகத்தின் 18 ஆவது இலவச திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணத் திரைப்படக்கழகத்தின் 18 ஆவது இலவச திரைப்படக் காட்சி எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 .30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தேவதை என்னும் திரைப்படம் யாழ்ப்பாணம் பலாலி வீதி கந்தர்வன் அம்மன் வீதியில் உள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் திரையிடப்படவுள்ளது.

ஆர்வம் உள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

மன்னாரில் காற்றாலைக்கு எதிராக தொடர்ச்சியாகச் சுழற்சி முறையில் போராட்டம் இடம்பெற்று வருகின்ற நிலையில் இன்று புதன்கிழமை 95 ஆவது நாளாகவும் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இதன்போது போராட்டக் களத்தில் இன்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

"ஜனாதிபதி நேற்று செவ்வாய்க்கிழமை மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்திருந்தார். அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எதிர்வரும் காலத்தில் எவ்விதமான காற்றாலை திட்டங்களும் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படாது என்கின்ற செய்தியை அமைச்சரவை ஊடாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனினும், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் 14 காற்றாலைக்கான வேலைத்திட்டங்கள் நிறுத்தப்படாது என்கின்ற விடயம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, இந்தப் போராட்டக் களத்தில் இருந்து நாங்கள் கூறிக்கொள்வது எமது போராட்டம் நின்று விடாது.

இந்த 14 காற்றாலைகளும் அகற்றப்பட்டு, ஏற்கனவே அமைக்கப்பட்ட காற்றாலைகளால் ஏற்படும் பாதிப்புகள் நிவர்த்தி செய்யப்பட்டு அதற்கான உத்தரவாதத்தை வழங்குவதன் மூலமும், மன்னார் மாவட்டத்தில் கனிய மணல் அகழ்வு இடம் பெறாது என்ற உத்தரவாதமும் வழங்கப்படுகின்றபோதே இந்தப் போராட்டம் நிறுத்தப்படும்.

எமது போராட்டம் நூறாவது நாளை எட்டுகின்ற போதும் மாவட்டத்தில் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது. கிராமங்கள் தோறும் தீப்பந்தப் போராட்டமும் முன்னெடுக்கப்படும்.

நாட்டுக்காகவும், நாட்டு வளத்தைப் பாதுகாக்கவும், மன்னார் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

எமது போராட்டத்தின் ஊடாக எமது குரலுக்குச் செவிசாய்த்த ஜனாதிபதிக்குப் போராட்டக்குழு சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது மூன்று கோரிக்கைகளையும் அவர் விரைவில் ஏற்றுக்கொள்வார் என நம்புகின்றோம். அவரது முடிவு கிடைக்கும் வரை இந்தப் போராட்டக் களத்தில் நாங்கள் காத்திருப்போம்.

எமது கோரிக்கைகளான மன்னார் தீவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் 14 காற்றாலைகள் அகற்றப்பட வேண்டும், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 36 காற்றாலைகளால் மன்னார் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அனைத்து பாதிப்புக்களும் உடனடியாக நிவர்த்தி செய்கின்ற முயற்சியில் ஈடுபடுவதாக எமக்கு உத்தரவாதம் வழங்கி எழுத்து மூலம் எமக்கு வழங்க வேண்டும், மன்னார் மாவட்டத்தில் எவ்வித கனிய மணல் அகழ்வுக்கும் அனுமதி வழங்க கூடாது – ஆகிய மூன்று கோரிக்கைகளையும் ஜனாதிபதி ஏற்றுக் கொள்வார் என நாங்கள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்." – என்றார்.

## கொழுந்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழுந்து அரைக்கும் இயந்திரத்தில் சிக்கி, தொழிலாளி ஒருவர் பலியாகியுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான கிட்ணன் விஜயகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டார் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் ஹட்டன் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்திற்கு வருகை தந்து ஆராய்ந்த பிறகு , சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





## ‘சங்கு’ இணங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் இன்று நடைபெற்ற பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்றைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் காலை 10 மணியிலிருந்து மாலை வரை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலே விசேடமாக வரப்போகின்ற வரவு – செலவுத் திட்டம் சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர்களோடு ஒரு கலந்துரையாடல் நடத்தியிருக்கின்றோம்.

எதிர்வரும் 7ஆம் திகதி ஜனாதிபதி, நிதி அமைச்சர் என்ற வகையில் தன்னுடைய வரவு – செலவுத் திட்ட யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்றார். அதற்குப் பிறகு இரண்டாம் வாசிப்பு விவாதம் நடைபெற்று 14 ஆம் திகதி அதற்கான வாக்கெடுப்பு நடைபெறும். அதற்குப் பிறகு குழுக்கள் மட்டத்தில் விவாதம் நடைபெறும். அதைத் தொடர்ந்து மூன்றாம் வாசிப்பு இடம்பெற்று அதற்கான வாக்கெடுப்பு நடைபெறும். இந்த விடயத்தை நாங்கள் மிகவும் தீவிரமாக ஆராய்ந்தோம். நாடாளுமன்றக் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய நிலைப்பாடுகளை அல்லது தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள்.

மத்திய செயற்குழு உறுப்பினர்களும் இன்றைய சூழ்நிலையிலே நாங்கள் என்னவிதமாக இதனை அணுக வேண்டும் என்கின்ற தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். இறுதி முடிவு எதுவுமே எடுக்கப்படவில்லை.

நாங்கள் ஜனாதிபதி தன்னுடைய யோசனைகளை எதிர்வரும் 7ஆம் திகதி முன்வைத்த பிறகு இரண்டாம் வாசிப்பு முடிவடைவதற்கு முன்னதாக எங்களுடைய அரசியல் குழுவோடு நாடாளுமன்றக் குழுவும் இணைந்து வாக்களிப்பில் எப்படிக் கலந்துகொள்வது என்பது சம்பந்தமான இறுதி முடிவெடுப்பது எனத் தீர்மானித்திருக்கின்றோம்.

அதைத் தொடர்ந்து நாங்கள் மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளோடு இணைந்து செயற்படுகின்ற விடயம் சம்பந்தமாகப் பேசப்பட்டது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு தலைவரும் நானும் ஏற்கனவே சில சந்தர்ப்பங்களில் உரையாடி இருக்கின்றோம். அது சம்பந்தமாக எங்களுடைய நிலைப்பாட்டை நாங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றோம். அந்த நிலைப்பாட்டில் அவர்களும் இணங்கி வருவார்களாக இருந்தால் நாங்கள் முன்னர் இருந்ததைப் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரோடு இணங்கிச் செயற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆகவே, அப்படியாக இணங்கிச் செயற்பட முன்வருமாறு நாங்கள் அவர்களுக்கு அழைப்பும் விடுக்கின்றோம். மத்திய செயற்குழுவிலே அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரோடும் நாங்கள் இது சம்பந்தமாக பேசலாமா என்ற விடயமும் எடுத்துக்கொள்ளப்பட்டது. சகல தமிழ்த் தரப்புக்களோடும் பிரதான தலைமைத் தமிழ்க் கட்சி என்ற ரீதியில் நாங்கள் அனைவரையும் இணைந்து செயற்படுமாறு அழைத்து விடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரோடு வைத்தியர் சத்தியலிங்கம் சுவிஸ் விஜயத்தின் போது சம்பாசனைகளில் ஈடுபட்டிருக்கின்றார். அது பற்றி எங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக ஒரே நிலைப்பாட்டைத் தமிழ்க் கட்சிகள் முன்வைக்குமா என்கின்ற ஒரு கேள்வி இருக்கின்றது. ஆகவே, அது சம்பந்தமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இறுதியாகக் கோட்டாபய ராஜபக்ஷ அரச காலத்தில் அபாபோதைய குழுவுக்கு முன்வைத்த யோசனை ஒன்று இருக்கின்றது. அதுதான் நாங்கள் இறுதியாக ஓர் அரசுக்கு முன்வைத்த யோசனை. நாங்கள் அதனை மற்றவர்களுக்கும் காண்பிப்பது என்று தீர்மானித்திருக்கின்றோம். அவர்கள் அதில் இணங்கி வருவார்களாக இருந்தால் அதை ஒரு பொது நிலைப்பாடாக நாங்கள் அரசுக்குத் தெரிவிக்க முடியும் என்று தீர்மானித்திருக்கின்றோம்.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்குத் தமிழரசுக் கட்சி ஒரு கோரிக்கை விடுத்திருக்கின்றது. எப்படியான விடயங்களை நாம் கதைப்பது என இதற்கு முன்னர் நடந்த மத்திய செயற்குழுவிலே எடுத்த தீர்மானத்தின் அமைவாக தலைவரும் நானும் கையெழுத்திட்டு அரசியல் தீர்வு சம்பந்தமாக அவரோடு பேசுவதற்கு எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாம் இருவரையும் (தலைவர், செயலாளர்) சேர்த்து பத்து பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும், நேரம் ஒதுக்கித் தருமாறும் நாங்கள் அவரிடத்திலே கோரிக்கை விடுத்திருந்தோம். அந்தக் கடிதம் அவருக்கு அனுப்பி வைக்கப் போகும்போது அவர் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையிலே கலந்துகொள்வதற்காக வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார். ஆகவே, அவர் திரும்பி வந்த பிறகு ஒரு நினைவூட்டல் கடிதமும் நான் அனுப்பி இருக்கிறேன். ஆனால், இதுவரைக்கும் எந்தவிதமான பதிலும் ஜனாதிபதியிடத்திலிருந்து எங்களுக்குக் கிடைக்கவில்லை.

எனினும் எதிர்வரும் 21 ஆம் திகதி எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு பேரணியை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. நாங்கள் அதில் பங்கேற்கவும் மாட்டோம்.

இதற்கு முன்னர் பல தடவைகளிலே பல்வேறு எதிர்க்கட்சிகள் சேர்ந்து செயற்படுகின்ற போது எங்களுக்கு அழைப்புகள் விடுப்பார்கள். நாங்கள் சில வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக இணைந்து பணியாற்றுகின்றோம். மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று சில வேலைத்திட்டங்களிலே எங்களோடு இணைந்து வருகின்றவர்களோடு சேர்ந்து பயணிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், பொதுவாக ஓர் எதிர்க்கட்சிக் கூட்டணியாக ஒன்று சேர்ந்து பயணிக்கத் தயாராக இல்லை.” – என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இணையக் குற்றங்கள்

இலங்கையில் இப்போது பல சமூக நெருக்கடிகளுக்கும் குழப்பங்களுக்கும் காரணமாக இருப்பவை இணைய வழிக் குற்றங்கள்தான். சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி - பொறுப்பற்ற முறையில் - பொறுப்புக் கூறக் கடப்பாடற்ற வகையில் - செயல்படும் நபர்கள் வதந்திகளையும் பொய்ப் பிரசாரங்களையும் அடிப்படையற்ற செய்திகளையும் பரப்பி, பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

அடையாளம் தெரியாத பிறிதொரு நாட்டில் இருந்து கொண்டு, அந்த நாட்டின் இணைய இணைப்பு ஊடாக நமது நாட்டுக்குள் திருகுதாளம் பண்ணும் பல சமூக ஊடகங்கள் கொடி கட்டிப் பறக்கின்ற காலம் இது. அவற்றினால் சமூகத்தில் ஏற்படும் சிக்கல்கள் அளவிட முடியாதவை. அவை பண்ணும் அலப்பறை சொல்லும் தரமன்று.

பொறுப்புக் கூறும் கடப்பாடற்றுச் செயல்படும் இந்த அநாமதேய சமூக ஊடகங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய விதத்தில் சைபர் குற்றங்களை எதிர்த்துப் போராடும் புதிய நடவடிக்கை ஒன்றுக்குள் இலங்கை நுழைந்து இருக்கின்றது.

கடந்த வாரம் வியட்நாமின் ஹாநொய் நகரில் சைபர் குற்றத்திற்கு எதிரான ஐ.நாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க பட்டயத்தில் (*UN Convention Against Cybercrime - UNCC*) கையெழுத்திட்டதன் மூலம், சைபர் குற்றத்தை எதிர்த்துப் போராடுவதில் உலக சமூகத்துடன் இலங்கை இணைந்திருக்கின்றது.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சுகளுடன் இணைந்து சமீபத்தில் அமைச்சரவை எடுத்த முடிவைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கையெழுத்து விழாவில் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் மற்றும் வியட்நாம் அதிபர் லுவாங் குவோங் ஆகியோர் கலந்து கொண்டிருக்கின்றனர்.

மொத்தம் 72 ஐ.நா. உறுப்பு நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் இந்த மாநாட்டில் கையெழுத்திட்டன. இது இந்த வகையான முதல் ஐ.நா. மாநாடு ஆகும். இது அனைவருக்கும் பாதுகாப்பான, மிகவும் வலிமையான மற்றும் நம்பகமான டிஜிட்டல் சூழலை உறுதி செய்வதற்கான சர்வதேச ஒத்துழைப்பில் ஒரு வரலாற்று மைல்கல் என்று கூறப்படுகின்றது.

இந்தப் பட்டயத்தில் கையெழுத்திட்டமை மூலம் இணங்கிய விடயங்களை அடுத்த மூன்று மாதங்களுக்குள் இலங்கையில் சட்டமாக்கும் விதத்திலான சட்ட மூலங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டலை அமைச்சரவை வழங்கியிருக்கின்றது என்றும் தெரிகின்றது.

இலங்கையில் இணைய வழிப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அது அடிப்படை மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் பறிக்கும் ஒன்றாக விமர்சிக்கப்பட்டது. இன்றளவிலும் அந்த விமர்சனம் தொடர்கின்றது. இப்போதும் கூட இந்த சைபர் குற்றங்களில் இருந்து பாதுகாக்கும் சட்ட மூலம் வெளிவரும் போதும் அதேபோன்ற குரல்கள் எழும்புவது தவிர்க்க முடியாததாக இருக்கும். மனித உரிமைகளை மதிக்கும் - மாண்புகளை - பண்புகளை - இழந்தால், அத்தகைய முறையற்ற போக்குகளைக் கட்டுப்படுத்துவதற்காக மனித உரிமைகள் சிலவற்றை இழக்க வேண்டி நேரும் என்பதை சமூகம் உணர்ந்து கொள்வது நல்லது.



# வவுனியாவில் மனைவியைக் கொலை செய்த கணவர் ஏறாவூர் பொலிஸில் தனது பெண் குழந்தையுடன் சரண்

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் மனைவியைக் கொலை செய்துவிட்டு இரண்டு வயது பெண் குழந்தையுடன் தலைமறைவான கணவர், ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தனது குழந்தையுடன் சரணடைந்துள்ளார்.

வவுனியா, பூம்புகார் பகுதியில் கொலை செய்யப்பட்ட நிலையில் இளம் குடும்பப் பெண் ஒருவரின் சடலத்தை நேற்று மாலை பொலிஸார் மீட்டனர்.

மேற்படி பெண் அவரது கணவர் மற்றும் பெண் குழந்தையுடன் நேற்றுக் காலை வீட்டில் இருந்தார்.

அந்தப் பெண்ணின் தாயார் பணி நிமித்தம் வெளியில் சென்றுவிட்டு மாலை வீட்டுக்குச் சென்று பார்த்தபோது தனது மகள் இரத்த வெள்ளத்தில் சடலமாகக் கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.



அதே பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயே சடலமாக மீட்கப்பட்டார்.

பெண்ணின் கழுத்துப் பகுதியில் கணவர் கூரிய ஆயுதத்தால் வெட்டியமையால் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை, பெண்ணின் கணவர், அவரது இரண்டு வயது பெண் குழந்தையுடன் தலைமறைவாகி இருந்தார்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், சந்தேகநபரான கணவர் நேற்று இரவு தனது குழந்தையுடன் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.







# 2009 இற்கு முன் போதைப்பொருள் பாவனையும் திட்டமிட்ட குற்றச்செயல்களும் வடக்கில் இல்லை

## ஆளும் தரப்பு எம்.பியான ஜெகதீஸ்வரன் கூறுகின்றார்

(கி.வசந்தன்)




வடக்கு மாகாணத்தில் 2009 இற்கு முன் இவ்வாறான போதைப் பொருள் பாவனையும் திட்டமிட்ட குற்றச் செயல்களும் காணப்படவில்லை என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் தற்போது இலங்கையிலே முக்கிய பேசுபொருளாக உள்ளன. உண்மையிலே இந்த இரண்டும் ஒரு நாட்டுக்குப் பெரும் சவாலை விடுகின்றவிடயமாகக்காணப்படுகின்றன. அதனாலேயே எங்களுடைய அரசாங்கம் இதற்கான தீர்க்கமான முடிவை மேற்கொண்டிருக்கின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு கடந்த 30 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் சுகததாஸ உள்ளரங்கில் இதனைத் தடுப்பதற்கான செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

தற்போது இலங்கையைப் பொறுத்தவரை போதைப்பொருள் பாவனை, போதைபொருள் விற்பனை, போதை பொருள் பரிமாற்றம் போன்ற விடயங்கள் மிகவும் முக்கியத்துவமாகக் காணப்படுகின்றன.

ஆரம்பத்திலே இலங்கை கணிசமான அளவிலே போதைப்பொருள் பாவிக்கக் கூடிய நபர்கள் இருக்கின்ற ஒரு தேசமாக இருந்தது. அதன் பிற்பாடு இலங்கையை போதை பொருள் பரிமாற்ற நிலையமாகவும் போதைப்பொருள் மாபியாக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். தற்பொழுது அதற்கு மேலாகச் சென்று போதை பொருளை உற்பத்தி செய்கின்ற அளவுக்கு மிக மோசமான நிலைக்கு எங்களுடைய நாடு தள்ளப்பட்டுள்ளது.

உண்மையிலே இந்தப் போதைப் பொருள் மாபியாக்கள் கடந்த கால அரசாங்கங்களினாலும், அரசியல்வாதிகளினாலும் அரவணைக்கப்பட்டு அவர்களுடைய வழிநடத்தலின், அவர்களுடைய ஒத்துழைப்பின் பலனாகவே எமது நாடு பாரதூரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மேலும் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற ரீதியிலே நாங்கள் இந்தப் போதைப்பொருளை ஒழிக்கும் செயற்பாட்டை முன்னெடுத்திருக்கின்றோம். நிச்சயமாக எங்களுடைய காலப்பகுதியிலே விரைவாக நாட்டிலிருந்து போதை பொருளை இல்லாதொழிப்பதற்கான திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

இப்போது பாவிக்கப்படுகின்ற போதைப் பொருள்கள் மிகுந்த மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அவற்றைப் பாவித்தவர்களுக்கு இனம் காண முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையும் நிலவுகின்றது. அயினும் வெளித் தோற்றத்துக்குத் தெரியாமல் அவர்கள் சாதாரண மனிதர்களைப் போல் நடமாடுகிறார்கள். இந்த விடயமானது மிகவும் சவாலானதாகவும், பாரதூரமானதாகவும் இருக்கின்றது.

குறிப்பாக போதை பொருள் மாபியாக்கள், போதை பொருள் வியாபாரிகள் எங்களுடைய பாடசாலை சிறுவர்கள், கல்வி சமூகங்கள், பல்கலைக்கழகங்கள் போன்ற இடங்களையே அவர்களின் இலக்காக கொண்டு தங்களுடைய வியாபாரங்களைத் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் எதிர்கால இலங்கையை ஓர் இருள் மயமான சூழலில் தள்ளுவதற்கான இவர்களுடைய இந்த முயற்சி நிச்சயமாக பயனளிக்கப் போவதில்லை. எங்களுடைய அரசாங்கமும் நாங்களும் உறுதியாக இருப்பதோடு இந்தப் போதை பொருள் மாபியாக்களை ஒழித்துக் கட்டுவதற்கு எமது நாட்டு மக்களினுடைய பூரண ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

மேலும் இவ்வேலைத்திட்டத்திற்கு அனைத்து திணைக்களங்களும் ஒருமித்து செயற்படுவதற்கு இணைந்துள்ளன. நாங்கள் எமது பொதுமக்களுக்கும் ஏனைய எதிர்க்கட்சியினருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம். எங்களோடு சேர்ந்து இந்த புனிதமான செயற்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் 2009 ஆம் ஆண்டு யுத்தத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் இப்படியான நிலைப்பாடு காணப்படவில்லை. ஆனால் 2009 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் வந்த அரசாங்கங்கள் திட்டமிட்ட வகையிலே வடக்கு மாகாணத்தின் எதிர்கால சந்ததியினை அழிக்கும் நோக்குடன் இந்த போதை பொருளை எங்களது பிரதேசங்களுக்கு கொண்டு வந்திருக்கின்றார்கள். நாங்கள் வடக்கு மாகாணத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே நிச்சயமாக இதற்கு எதிராக முழுமூச்சாகச் செயல்படுவோம்.

அந்த வகையிலே எமது எதிர்கால சந்ததியை ஆரோக்கியமானதாகவும் பலமானதாகவும் உருவாக்க வேண்டிய பொறுப்பை நாங்கள் ஏற்றிருக்கின்றோம். நிச்சயமாக அந்தப் பணியை நாங்கள் நிறைவேற்றியே தீருவோம். அத்தோடு சேர்ந்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களும் பாரிய ஒரு பிரச்சனைக்குரிய விடயமாகவும், சவாலான விடயமாகவும் நாட்டின் சட்ட திட்டங்களை அமுல்படுத்த சவாலாக இருக்கின்றன.

குறிப்பாக ஆயுத கலாசாரம் மேலோங்கி இருக்கின்றது. இவற்றையும் நாங்கள் படிப்படியாக கட்டுப்படுத்தி வந்து கொண்டிருக்கின்றோம். அது வடக்கு வரை வியாபித்து இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். நிச்சயமாக அதில் நாங்கள் எங்களுடைய கவனத்தை செலுத்த இருக்கின்றோம்.

உண்மையிலேயே இது ஒரு வேடிக்கையான விடயமாகும். போதை பொருள் அல்லது குற்றச் செயல்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

குறிப்பாக இச்செயற்திட்டத்தில் ஜனாதிபதி, ஆளும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட அனைவரும் இதற்கு முழுமையாக நின்று செயல்படுகின்றார்கள். இதன்படி எங்களுக்கு தான் பாதுகாப்பு தேவையாகும். ஆனால் எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. எங்களது பாதுகாப்பு எங்களது மக்களாவர். நிச்சயமாக எங்களுக்கு எங்களது மக்கள் பாதுகாப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

எதிர்க்கட்சியினர் ஏனோ தங்களுக்கு ஆயுதம் வேண்டும் என்று கூறுகிறார்கள் அல்லது துப்பாக்கி வேண்டும் என்று கூறுகிறார்கள் அல்லது பாதுகாப்பு வேண்டும் என்று கூறுகிறார்கள் என்பது வினோதமான விடயமாக இருக்கின்றது. நான் நினைக்கின்றேன் போதை பொருள் மாபியாக்களோடும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களோடும் தொடர்பு ஏதும் இருக்கின்றதோ தெரியவில்லை.

நிச்சயமாக அவ்வாறு இருக்கின்ற பட்சத்தில் அவர்கள் காட்டிக் கொடுக்கப்படலாம் அல்லது ஏதோ ஒரு கட்டத்தில் தங்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற நோக்கிலே அவ்வாறு கேட்டிருக்கலாம். அவ்வாறு அவர்கள் கேட்டிருந்தால் அது நியாயமானதே. - என அவர் தெரிவித்தார்.





# மட்டு. கிரான்குளத்தில் காட்டு யானைகளை விரட்டும் வேலை இரவிலும் முன்னெடுப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் எழுவான் நிலப் பிரதேசத்தில், மட்டக்களப்பு வாவியோரமுள்ள சதுப்பு நிலப்பரப்பிற்குள் கடந்த இரண்டு மாதகாலமாக காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் மக்கள் தாம் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர் எனக்கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க் கிழமை இரவு மட்டக்களப்பு கிரான்குளம் கிராமத்தில் காட்டு யானைகள் சஞ்சரிப்பதை அவதானிக்க முடிந்தது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் மண்முனை பற்று பிரதேச சபை தவிசாளர் செந்தில்குமார் ஆகியோர் சென்று வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கிய மையை அடுத்து காட்டு யானைகளைத் துரத்தும் பணி விரைந்து முன்னெடுக் கப்பட்டது.

காட்டு யானைகளை துரத்தும் நடவடிக்கையில், மட்டக்களப்பு வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும், இராணுவத்தினரும் இணைந்து முன்னெடுத்தனர்.







# தம்பியை அச்சுறுத்தி முறைகேடான உறவில் கர்ப்பமானாராம் சகோதரி!

## சம்மாந்துறையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

உடன்பிறந்த தம்பியை தொடர்ச்சியாக அச்சுறுத்திய நிலையில் கர்ப்பமான சகோதரி சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லரைச்சல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என்.நிசாந்த பிரதிப் குமாரவின் வழிகாட்டுதலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் விசாரணை பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை கல் வாடியில் வேலை செய்வதுடன் தாய் இல்லத்தரசியாக இருக்கின்றார். இந்த நிலையில் இந்தச் சம்பவம் 4 வருடங்களாக இடம்பெற்றுள்ளமை ஆரம்ப விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் சகோதரனுக்கு சுமார் 11 வயது இருக்கும் போது சகோதரிக்கு 18 வயதாகிய நிலையில் இந்தச் சம்பவம் ஆரம்பமாகியுள்ளது.

இந்தச் செயலுக்கு உடன்பிறந்த தம்பி எதிர்ப்பு தெரிவித்த நிலையில் கத்தி உள்ளிட்ட ஆயுதங்களால் மிரட்டி இந்தச் செயலை தொடர்ச்சியாக 4 ஆண்டுகளாக உடன்பிறந்த சகோதரி மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் தற்போது 22 வயதான குறித்த சகோதரி வயற்றில் ஏற்பட்ட வலி காரணமாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதன்போது சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்பட்ட நிலையில் முறைகேடான உறவினால் 2 மாத கர்ப்பம் தரித்த விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

மேலும் இன்று (05) மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் விசாரணை பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அமெரிக்க தொண்டர் ஆசிரியர்கள் நுவரெலியா மாவட்டத்தில் கடமையில்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் ஆங்கில ஆசிரியர்கள் ஏற்பாட்டில் ஆங்கில முகாம் ஒன்று இன்று புதன்கிழமை நடைபெற்றது.

அமெரிக்கா பீஸ்கோப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அமெரிக்காவில் இருந்து வருகைத் தந்து நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பாடசாலைகளில் ஆங்கில தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றும் சிலர் இந்த முகாமில் கலந்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ், பிரதி அதிபர் இளங்கோ, ஆங்கில ஆசிரியர்கள் கேதீஸ், கவிதா மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.







# முள்ளிவாய்க்கால் மேற்கு மாவீரர் துயிலுமில்ல துப்புரவுப் பணியும், பணிக்குழு நிர்வாகத் தெரிவும்!

## ரவிகரன் எம்.பி. பங்கேற்பு

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லத்தின் ஆரம்பக்கட்டத் துப்புரவுப்பணியும், மாவீரர்நாள் பணிக்குழுவின் நிர்வாகத்தேர்வும் நேற்று (04) இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

அந்தவகையில் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தில் பிரத்தியேகமாக வடிவமைக் கப்பட்ட இடத்தில் மலர்தூவி, சுடரேற்றப் பட்டு உணர்வெழுச்சியுடன் மாவீரர்க ளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மாவீரர் நாள் பணிக்குழு நிர்வாகத் தெரிவுகள் இடம் பெற்றதுடன், துயிலுமில்ல வளாகத்தில் ஆரம்பக்கட்ட சிரமதானப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.



# 3000 திருமந்திர முற்றோதலுடன் திருமூலரின் குருபூஜை நிகழ்வுகள்





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கொக் கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய சிவபூமி திருமந்திர அரண்மனையில் 3000 திருமந்திர முற்றோதலுடன் திருமூலரின் குருபூஜை நேற்று (04) செவ்வாய்க்கிழமை ஆலயத் தலைவர் இ.மேகராசா தலைமையில் பாரம்பரிய சம்பிரதாய முறைப்படி நடைபெற்றது.

ஆலய குருக்களான சிவஸ்ரீ மு. கு.அமிர்தலிங்கம், சிவஸ்ரீ வ. ஜோதிலிங்க குருக்கள் ஆகியோரின் கிரியைகளுடன் திருமூலர் குருபூஜை நடைபெற்றது.

கடந்த மூன்று தினங்களாக திருமூலர் அருளிய திருமந்திரம் மற்றும் மணிவாசகர் அருளிய திருவாசகம் என்பனவற்றின் முற்றோதல் இடம்பெற்றது. ஆலய குரு சிவஸ்ரீ சபாரெத்தினக்குருக்கள் தலைமையில் இந்த முற்றோதல் இடம்பெற்றது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய சைவ ஆன்மீக விருத்திச் சங்கம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் ஆலய பரிபாலன சபையின் வண்ணக்கர்களான இ. மேகராசா (தலைவர்), சி.கங்காதரன்(செயலாளர்), ச. கோகுலகிருஷ்ணன் (பொருளாளர்), பட்டிப்பளை பிரதேச முன்னாள் தவிசாளர் அதிபர் சி.அகிலேஸ்வரன் உள்ளிட்ட பரிபாலன சபையினர் கலந்து கொண்டனர்.



# போதைப்பொருள் ஒழிக்கும் தேசிய வேலை திட்டத்துக்கு கட்சி பேதமின்றி மக்கள் பிரதிநிதிகள் ஒன்றிணையுங்கள்!

## அம்பாறை நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை

(கே. எ. ஹமீட் )

போதைப்பொருளை ஒழிக்கும் தேசிய வேலை திட்டத்துக்குக் கட்சி பேதமின்றி மக்கள் பிரதிநிதிகள், மார்க்க தலைவர்கள், கிராம மட்டத் தலைவர்கள் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர, கிராமப்புற அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டுக்கான பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ ஆகியோர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது நாட்டில் போதைப்பொருள் ஒழிப்பதற்கான வேலைத் திட்டங்களை அரச அதிகாரிகளும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்துவருகின்றனர். இந்தத் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கான பூரண ஒத்துழைப்பை கட்சி பேதமின்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ,உள்ளூராட்சி தலைவர்கள், மார்க்க தலைவர்கள், கிராம மட்ட தலைவர்கள் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

போதைப்பொருள் பாவனையானது எமது சமூகத்தின் எதிர்கால சந்ததியினரை அழிவுப் பாதைக்குள் இட்டுச் செல்லும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே எமது எதிர்கால சமூகத்தின் நன்மை கருதி முன்வைக்கப்பட்டு வரும் தேசிய திட்டத்திற்கு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பள்ளிவாசல்கள், கோயில்கள், விகாரைகள், தேவாலயங்கள் ஊடாக நமது மக்கள் மத்தியில் போதைப்பொருள் எதிர்ப்புத் திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வேலைத்திட்ட அறிவிப்புகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதுவரை அரசு நமது மக்களுக்காக முன்வைத்து வந்த நல்ல வேலை திட்டங்களுக்கு எதிர்க்கட்சியினர் ஆதரவு வழங்கி வருகின்றது. குறிப்பாக நமது அம்பாறை மாவட்ட மக்களின் நன்மை பெறும் வேலை திட்டங்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம். நமது மாவட்டத்தில் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் பல பிரச்சினைகள் உள்ளன. அந்தப் பிரச்சினைகளைச் சமாதானமாகப் பேசித் தீர்வுகளைக் காண வேண்டும்.

கடந்த பத்து வருட காலமாக இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள நாவலடி வட்டை முஸ்லிம்களின் காணி தொடர்பான பிரச்சினை தொடர்பாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம தலைமையில் விசேட கூட்டத்தை கூட்டி சகல தரப்பினரும் ஒன்றாக அமர்ந்து கலந்துரையாடி எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தீர்வுகளை கண்டுள்ளோம். இதேபோன்று நமது மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்க வேண்டும்.

விவசாய நீர்ப்பாசன காணி அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்திலும் சீன நாட்டின் விசேட தூது குழுவுடனும் நடைபெற்ற கூட்டத்திலும் நமது அம்பாறை மாவட்டத்தில் சம்புக்களப்பு தில்லையாறு கரவாகுப்பற்று வடிச்சல் திட்டங்கள் தொடர்பாக நானும் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் முன்மொழிவுகளை முன்வைத்துள்ளோம்.

இந்த வடிச்சல் திட்டம் தொடர்பாக விரைவில் நாடாளுமன்றத்தில் விசேட கூட்டங்கள் நடைபெறவுள்ளன. அக்கரைப்பற்று கல்முனை நீர்ப்பாசன பொறியியலாளர்கள் சம்புக்களப்பு வடிச்சல் திட்டங்கள் தொடர்பாக திட்டங்களை தயார்படுத்த முன்வர வேண்டும்.- என்றார்.

இது தொடர்பாக ஏற்பாடுகளை நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என பிரதி அமைச்சர் திரு வசந்த பியதிஸ்ஸ தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் 26 ஏக்கர் அரச காணியில் ஆசிய நாடுகளின் நான்காவது அரிசி ஆலையான சவளக்கடை அரிசி ஆலை இயங்கி வந்தது. இதனால் நமது நாட்டுக்கும் அம்பாறை மாவட்டத்தின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காளிப்பு செய்தது. அரச காணிகளில் நாவிதன்வெளி பிரதேச மக்களின் பொது தேவைக்காக வழங்கப்பட்டு இறுதியாக உள்ள அரச காணியில் சவளக்கடை அரிசி ஆலையை மீள ஆரம்பிப்பிப்பதற்கான செயற்பாடுகளை நெல் சந்தைப்படுத்தும் சபை முன்னெடுக்க வேண்டும் எனவும் நாவிதன் வெளி பிரதேசத்தில் அமைந்துள்ள அரச காணியில் மத்திய முகாம் மக்களின் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான காணியை அடையாளம் கண்டு வழங்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை விடுத்தார்.

சவளக்கடை அரிசி ஆலைக்கான காணியை அடையாளப்படுத்துவதுடன் நாவிதன்வெளிப் பகுதிக்கான விளையாட்டு மைதானத்துக்கான காணியை அடையாளப்படுத்தும் செயற்பாடு குறித்து அடுத்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு நாவிதன் வெளி பிரதேச செயலாளருக்கு பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ பணிப்புரை வழங்கினார்.



# மட்டக்களப்பில் இருவேறு பகுதிகளில் இன்று சுனாமி ஒத்திகை நிகழ்வுகள்

**(மட்டக்களப்பு நிருபர்)**

சர்வதேச சுனாமி தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தின் பிரதான சுனாமி ஒத்திகை நிகழ்வு மற்றும் பயிற்சி என்பன இன்று புதன்கிழமை (05) காலை 8.30 மணிக்கு மட்டக்களப்பில் இரு வேறு பகுதிகளில் நடைபெற்றன.

சுனாமி அனர்த்த பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு மட்டக்களப்பு கன்னன்குடா மகா வித்தியாலயத்திலும் காத்தான்குடியில் ஒரு கிராம சேவகர் பிரிவிலும் இந்த ஒத்திகை நிகழ்வு நடைபெற்றது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், மட்டக்களப்பு மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், இராணுவத்தினர் மற்றும் கல்வி திணைக்களத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் சத்யானந்தி, இராணுவத்தினர், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



கன்னன்குடா பாடசாலையில் மாணவர்களுக்கு தெளிவு ஊட்டும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

சுனாமி ஏற்பட்ட காலத்தில் இந்தப் பகுதியில் கடல் நீர் வந்ததுடன் சடலங்களும் மீட்கப்பட்ட நிலையில் இவர்களுக்கு சுனாமி பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பயிற்சிகளும் விழிப்புணர்வு கருத்தரங்கும் நடைபெற்றன.

சுனாமி அனர்த்த பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் முன்னாயத்த நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக வருடாந்தம் பிராந்திய நாடுகளுக்கான சுனாமி ஒத்திகை பயிற்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் கல்வி கண்காட்சி நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் கல்வி கண்காட்சியும் ஆரம்ப நாள் நிகழ்வும் நேற்று (04) இடம்பெற்றன.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இந்த நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

இதன் பின்னர் கல்லூரியின் பணிப்பாளர் ஏ.நற்குணேஸ்வரன் கல்லூரியில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாகவும் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் ஆளுநருக்கு எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து கண்காட்சிக் கூடங்களை ஆளுநர் பார்வையிட்டார்.

கண்காட்சியைப் பாடசாலை மாணவர்களும் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

















# இங்கினியாகல நீர் மின் நிலையத்தில் சபை ஊழியர்களால் இரத்ததான நிகழ்வு

(வி.ரி. சகாதேவராஜா)

இங்கினியாகல நீர் மின் உற்பத்தி நிலையத்தில் நேற்று (04) செவ்வாய்க் கிழமை இரத்ததான முகாமொன்று இடம்பெற்றது.

மின் பொறியலாளர் எச்.எல்.எம்.சி. சேனாதீர தலைமையில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாம் அம்பாறை பொது வைத்தியசாலையால் ஒழுங்கு செய்யப்பட்டது.

இங்கு 65 இற்கும் மேற்பட்ட இரத்த கொடையாளர்கள் இரத்தம் வழங்கினர்.

இந்த இரத்ததான நிகழ்வில் மின் அத்தியட்சகர்கள், மின்சார சபை ஊழியர்கள் மற்றும் இங்கினியாகல பொது மக்கள், பல அரச திணைக்கள ஊழியர்களும் கலந்து கொண்டு இரத்தம் வழங்கினார்கள்.

இங்கினியாகல நீர் மின் உற்பத்தி நிலையத்தால் 10 ஆவது தட வையாக இந்த இரத்ததான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# காத்தான்குடி முதியோர் மற்றும் சிறுவர் இல்ல உறவுகளுடன் ஐகோனிக் இளைஞர் அமைப்பு

(றிஸ்வான் சாலிஹூ)

ஐகோனிக் யூத்ஸ் - ஸ்ரீலங்கா அமைப்பானது காத்தான்குடியிலுள்ள முதியோர் மற்றும் சிறுவர் இல்ல உறவுகளுடன் “ஒரு நாள் பொழுதை இன்பமாக கழிப்போம்” என்ற தொனிப்பொருளில் ஒருநாள் பொழுதை மகிழ்ச்சிகரமாகக் கழித்துள்ளனர்.

வருடா வருடம் நடத்தும் இந்தச் செயற்றிட்டத்தின் பத்தாவது வருடமாக இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை (01) இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது, அமைப்பின் தலைவர் முஹம்மட் தில்ஷானின் வழிகாட்டலில் தவிசாளர் சிமாம் முஸ்தாக்கின் தலைமையில் அமைப்பின் ஆலோசகர்கள், நிறைவேற்று சபை அங்கத்தவர்கள், உறுப்பினர்கள்,தொண்டர்கள், பெண்கள் பிரிவினர் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெற்றது.

அமைப்பின் பெண் அங்கத்தவர்களால் தலைமைத்துவப் பயிற்சி, ஆளுமை விருத்தி, தன்னம்பிக்கையையூட்டும் பயிற்சிகள் இதன்போது வழங்கப்பட்டன. கலை கலாச்சார இஸ்லாமிய பாரம்பரிய நிகழ்ச்சிகளை சிறுவர் இல்ல





சிறார்களுடன் இணைந்து நடத்தி மகிழ்வித்தனர்.

அத்தோடு, முதியோர் இல்லத்தில் உள்ளவர்களோடு அமைப்பின் சகல அங்கத்தவர்களும் அன்பாக பேசியதோடு, எதற்காக முதியோர் இல்லத்திற்கு நாம் வந்தோம் என்கிற கவலையான அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அவர்களோடு பகிர்ந்து கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது சிறுவர் இல்லம் மற்றும் முதியோர் இல்ல உறவுகளுக்கு தேவையான ஒரு தொகுதி பொருள்களும் கையளிக்கப்பட்டன.





# மித்தெணிய - வலஸ்முல்ல வீதியில் நடந்த விபத்தில் இளைஞன் பலி!

**(உடப்பு க.மகாதேவன்)**

மித்தெணிய – வலஸ்முல்ல வீதியில் கரமட்டிய பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை இயக்கிச் சென்ற 24 வயதுடைய இளைஞர் ஒருவர், எதிரே வந்த பஸ்ஸுடன் மோதியதில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் நினைவும்

**(பூ.லின்ரன்)**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் நினைவு தினமும் நேற்று (04) வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெற்றன.

கல்லூரியின் வளாகத்தில் அமைந்துள்ள சரஸ்வதி சிலையடியில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. பின்னர் தேசியக் கொடி, பாடசாலைக் கொடி என்பன ஏற்றி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து விருந்தினர்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர் மேற்கத்திய இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றிவைக்கப்பட்டு, இறை வணக்கம் இசைக்கப்பட்டு நிகழ்வானது ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை, விருந்தினர்கள் உரைகள், மாணவர்களது கலை நிகழ்வுகள் மற்றும் பரிசில்கள் வழங்கல் என்பன இடம்பெற்றன. கல்லூரியின் பதில் அதிபர் மயூரன் தலைமையில் நடைபெற்ற இந்த பரிசளிப்பு விழாவில், விருந்தினர்கள், ஆசிரி யர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாண வர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் இந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டனர்.











# யாழ். நகரை அழகுபடுத்துவதற்கான முயற்சிகளுக்கு வர்த்தக சங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்

## ஆளுநருடனான சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டது

2026 ஆம் ஆண்டில் சுற்றுலா செல்வதற்கு உரிய சிறந்த இடமாக யாழ்ப்பாணம் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், யாழ். நகரை அழகுபடுத்துவதற்கான முயற்சிகளுக்கு யாழ்ப்பாண வர்த்தக சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுடனான சந்திப்பின்போது உறுதியளிக்கப்பட்டது.

வர்த்தக சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் வர்த்தக சங்கத்தால் பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டு அவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

யாழ்ப்பாணம் நவீன சந்தை கட்டடத் தொகுதியிலுள்ள பல கடைகளின் உரிமம் மாற்றம் தொடர்பான நடவடிக்கை கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அது பெருமளவுக்கு நடைபெறவில்லை என சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் கவனமெடுத்து விசேடமாக ஆளணியை நியமித்து விரைவாக நிறைவுசெய்வதற்கு உரிய ஒழுங்குகளை முன்னெடுக்குமாறு யாழ். மாநகர சபையின் மேயர் மற்றும் ஆணையாளரை ஆளுநர் கோரினார். உரிமம் மாற்றத்தை செய்வதன் ஊடாக மாநகர சபைக்கான வருமானம் பல கோடி ரூபா வரையில் கிடைக்கப்பெறும் என்பதையும் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

நவீன சந்தைக் கட்டடத் தொகுதியிலுள்ள வாகனத் தரிப்பிடம் தொடர்பிலும் வர்த்தக சங்கப் பிரதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அவர்களால் அடையாளப்படுத்தப்படும் இடத்தின் பொருத்தப்பாட்டை நேரில் சென்று ஆராய்ந்து நிறைவேற்றிக் கொடுக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார். அத்துடன் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியிலுள்ள மலசலகூடம் உள்ளிட்ட நகரப் பகுதியிலுள்ள மலசலகூடங்களின் சீர்கேடுகள் தொடர்பில் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் விசனம் வெளியிட்டனர். அவற்றை உரியமுறையில் சீர்செய்வதுடன் தொடர் பராமரிப்புக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் கோரினார்.

மேலும் நவீன சந்தைக் கட்டடத் தொகுதிக்கு வர்ணப்பூச்சு மேற்கொண்டு பல ஆண்டுகள் கடந்திருக்கும் என்று குறிப்பிட்ட வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், யாழ். நகரின் மையப்பகுதி இவ்வாறு பாழடைந்தமை போன்ற தோற்றப்பாட்டில் இருப்பது நகருக்கு அழகில்லை எனவும் சுட்டிக்காட்டினர். அவற்றை வர்ணப்பூச்சு பூசி அழகுபடுத்துவதுடன் மரங்களை வைத்து அழகுபடுத்துவதற்கு உரிய ஒழுங்குகளை மாநகர சபை மேற்கொள்ள வேண்டும் என்றும் தேவையான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

யாழ். நகரின் முக்கிய இடங்களில் சிலைகளை வைப்பதன் அவசியத்தையும் இலங்கையில் ஏனைய நகரங்களில் அவ்வாறு சிலைகள் வைக்கப்பட்டு அவை உயிர்ப்புடன் எவ்வாறு உள்ளன என்பது தொடர்பிலும் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

பொருத்தமான இடங்களை அடையாளம் கண்டு சிலைகளை வைப்பதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்வதுடன், ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள சிலைகளை உயிரோட்டமாக தென்படக் கூடியவாறான வர்ணப்பூச்சு வேலைகளையும் முன்னெடுக்குமாறு ஆளுநர் கோரினார்.

யாழ்ப்பாண நகரிலுள்ள கழிவு வாய்க்கால்கள், குப்பைகள் தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. அவற்றை துப்புரவு செய்வதற்கான முயற்சிகள் மாநகர சபை எடுத்துள்ள நிலையில் அதனை துரிதப் படுத்துமாறும் அதற்கான ஒழுங்குமுறைகளையும், தண்டங்களையும் அறிமுகப் படுத்துமாறும் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர். மாநகர சபையை அதனைச் செயற்படுத்துமாறு ஆளுநர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண நகரில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒருவழிப் பாதையூடாக வர்த்தகர்கள் பாதிக்கப்படுவதாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். வர்த்தகர்களைத் தவிர ஏனையோர் அவ்வாறு ஒருவழிப் பாதையாக்கியதன் ஊடாக போக்குவரத்து நெரிசல் குறைந்துள்ளதை ஆளுநர் குறிப்பிட்டார்.

நகரின் மத்தியிலுள்ள பஸ் நிலையத்தாலேயே அந்த நெரிசல் ஏற்பட்டது என்பதையும், தனியாரும், இலங்கை போக்குவரத்துச் சபையினரும் நெடுந்தூர பஸ்களை புதிய பஸ் நிலையத்தில் இருந்து இயக்குவதன் ஊடாக இதனைச் சீர் செய்ய முடியும் என்பதையும் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்துடன் பஸ் நிலையத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கடைகளால் அங்கு இடம்பெறும் சட்டவிரோத செயல்கள் தொடர்பாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். தூய்மை இலங்கை செயற்றிட்டத்தின் ஊடாக யாழ். மத்திய பஸ் நிலையம் அபிவிருத்தி செய்யப்படும்போது அங்குள்ள கடைகள் அகற்றப்படும் என ஏற்கனவே இலங்கை போக்குவரத்துச்சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் மாவட்டச் செயலக கூட்டத்தில் தெரிவித்ததை நினைவு கூர்ந்த ஆளுநர், நெடுந்தூர பஸ்கள் புதிய பஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்ட பின்னர் வீதியின் நெருக்கடி நிலைமையை அவதானித்து நிலைமையை ஆராயலாம் எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், மாநகர சபையின் மேயர், மாநகர சபையின் ஆணையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







# ஆறாத வடு!

## செம்மணி நிலத்தில் நீதிக்காக காத்திருக்கும் ஆத்மாக்கள்...!



பொனிஸ்ரெலா சந்தியாசன்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் வடுக்கள் முழுமையாக ஆறவில்லை என்பதற்கு, யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி ஒரு நீங்காத சாட்சியாக உள்ளது. காலத்தின் போக்கில் மௌனமாக மறைந்திருந்த இந்தச் சோகச் சுவடுகள், மீண்டும் வெளிப்பட்டு, உலகம் முழுவதும் நீதிக்கான குரலை எழுப்ப வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

யாழ்ப்பாணத்தின் அமைதியான நிலப்பரப்பில், செம்மணி என்ற பெயர் இன்றும் ஒரு நீண்ட, அமைதியான கூச்சலாகவே ஒலிக்கிறது. இது வெறும் ஒரு புவியியல் இருப்பிடம் அல்ல, மாறாக மனிதத்தின் மீதான பாரிய வன்முறையின் ஆழமான காயத்தை சுமந்து நிற்கும் துயரத்தின் புதைகுழியாகும். காலம் கடந்துவிட்ட போதிலும், அந்த நிலத்தின் ஒவ்வொரு மணல் துகளும், மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட பல உயிர்களின் கதைகளைச் சுமந்தபடி இருக்கிறது. அந்த மண் பேசும் மொழியை மனித காதுகளால் கேட்க முடியாது, ஆனால், அது வெளியிடும் அமைதியான வலி, ஆயிரக்கணக்கானோரின் இதயங்களை இன்றும் உலுக்கிக் கொண்டிருக்கிறது.

### காணாமல் போனவர்களின் நிழல்கள்

இந்த இடத்தில் இருந்து மீட்கப்பட்டவை வெறும் எலும்புக் கூடுகளோ அல்லது தடயவியல் எச்சங்களோ அல்ல. அவை, ஒரு நாள் தங்கள் அன்புக்குரியவர்கள் திரும்பி வருவார்கள் என்று நம்பிய தாய்களின் நீங்காத நம்பிக்கைகள், குழந்தைகளின் நசுக்கப்பட்ட கனவுகள், மற்றும் குடும்பங்களின் கலைந்து போன எதிர்காலங்கள் ஆகும்.

ஒவ்வொரு எலும்புத் துண்டும், இங்கு புதைக்கப்பட்ட ஒவ்வொரு உடலும், ஒருவரின் மகன், மகள், தாய் அல்லது தந்தையாக இருந்தவர்கள். அவர்கள் இறுதியாக என்ன அனுபவித்தார்கள் என்ற கேள்வி, இன்றுவரை ஒரு மர்மமாகவே உள்ளது. அவர்களது கதைகள் முழுமையடையாதவை. அவர்களுக்கு மரணம் மட்டுமே தீர்வாக இருந்தது என்ற அடிப்படை உண்மை, மனித மனதை உலுக்கும் பேரிழப்பு. இங்கு மீட்கப்பட்ட சிறு குழந்தைகளின் உடமைகளும், பால் போத்தல்களும், யுத்தத்தின் கொடூரமான முகம், வயது வரம்பின்றி அப்பாவி உயிர்களைக் காவு கொண்டது என்பதை நிரூபிக்கும் நீங்காத சாட்சியங்களாகும்.

### நீதிக்கான நீண்ட பயணம்

செம்மணி சம்பவம், இலங்கை சமூகத்தில் நீதியை நிலைநாட்டுவதில் இருக்கும் ஆழமான தோல்வியைக் காட்டுகிறது. இந்தப் புதைகுழி திறக்கப்படும் ஒவ்வொரு முறையும், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தங்களது துயரத்தை மீண்டும் புதியதாக உணர்கிறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பது அரசியல் தீர்வுகளோ அல்லது சலுகைகளோ அல்ல. அவர்கள் கோருவது அடிப்படை மனிதாபிமான நீதியை மட்டுமே.

தங்கள் அன்புக்குரியவர்களை ஏன் இழந்தார்கள்? எங்கு இழந்தார்கள்? யார் இதற்குக் காரணம்? என்ற கேள்விகளுக்கு, காலம் தாழ்த்தப்பட்ட பதில்களேனும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்.

விசாரணைகளுக்கான நிதியை நிறுத்துவது, அல்லது அரசியல் தலையீடுகளால் வழக்குகளை முடக்குவது போன்ற ஒவ்வொரு தடையும், இந்தப் புதைகுழியை மீண்டும் ஒருமுறை மூடி, உண்மையை இருளில் தள்ள முயலும் முயற்சியாகவே தோன்றுகிறது. ஆனால், செம்மணி என்பது மூட முடியாத ஒரு திறந்த காயமாகும். அது ஒவ்வொருவரையும் பார்த்து, "மனித உயிர் அவ்வளவு மலிவானதா?" என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும்.

### ஒரு தேசிய மனசாட்சியின் கேள்வி

செம்மணி மனிதப் புதைகுழி, ஒரு குறிப்பிட்ட இனம் அனுபவித்த துயரத்தின் நினைவாக மட்டுமல்லாமல், ஒரு தேசிய மனசாட்சியின் சோதனையாக இருக்கிறது. உண்மையை வெளிக்கொண்டு வராத வரையிலும், குற்றவாளிகளைப் பொறுப்பேற்கச் செய்யாத வரையிலும், இந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களின் நிழல்கள், நாட்டின் அமைதியைக் குலைத்துக் கொண்டே இருக்கும்.

செம்மணிக்கு நாம் செலுத்தக் கூடிய உண்மையான அஞ்சலி என்பது, அங்கு புதைக்கப்பட்ட ஆத்மாக்களுக்கு நீதியைப் பெற்றுத் தருவதும், எதிர்கால சந்ததியினர் இத்தகைய கொடுமையை ஒருபோதும் அனுபவிக்காமல் இருப்பதை உறுதிசெய்வதுமே ஆகும். இது வெறும் ஒரு பத்திரிகைக் கட்டுரை அல்ல. இது நீதிக்காகக் காத்திருக்கும் ஒரு தேசத்தின் இதயத்தில் இருந்து வரும் அழுகுரல்.



# மாவீரர்களின் வரலாற்றைக் கூறும் துயிலும் இல்லங்கள்...!

வீரர்களுக்கு “மா” என்ற அடைமொழி கொடுத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். “மா” என்ற தழுவுசொல் ஒரு அர்த்தமுள்ள உயிர்மெய் எழுத்து. உயிரும் உடலும் கலந்த அர்த்தம் அதாவது உயிர் எழுத்து “ஆ” மற்றும் மெய் எழுத்து “ம்” என் உயிர், மெய் இணைந்து அதில் வெளிப்படுகின்றது.

அழகு, வலிமை, பெருமை, பெரிய, குற்றமற்றவர் என்பன “மா” அடையின் பிற அர்த்தங்களாகும். பழந்தமிழர் வரலாற்றில் மாவீரர் என்ற சொற் பிரயோகம் கிடையாது. விசேட அர்த்தங்களோடு மாவீரர் என்ற சொல்லை முதன் முதலாகப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளாவர். மாவீரர் என்பது ஆண், பெண் இருபாலாரையும் ஒரு சேரக் குறிக்கும் பொதுச் சொல்.

வரலாற்றில் முதல் ஆண் மாவீரர் லெப். சங்கர் என்றழைக்கப்படும் செல்வச்சந்திரன் சத்தியநாதன் ஆவார்.

இவர் யாழ். வடமராட்சி கம்பர்மலை எனும் கிராமத்தில் 1961 ஜூன் 19 ஆம் நாளில் பிறந்தவர். 1982 நவம்பர் 27 ஆம் திகதி அவர் வீரச்சாவடைந்தார்.

மாவீரர்களின் இறப்பை “வீரச்சா” என்று அழைப்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் இன்னுமோர் மரபு. மாவீரர்களின் சாவு தனித்துவமானது. தமிழீழத் தேசியத் தலைவர் “காலத்தால் அழியாத



பானுஷா நிமல்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

சிரஞ்சீவிகள், சுதந்திரச்சிற்பிகள், எமது மண்ணில் ஒரு மாபெரும் எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள் “ என்று கூறியுள்ளார்.

லெப் சங்கரின் வீரச்சா நாளான நவம்பர் 27 ஈழத் தமிழர்களாலும் உலகத் தமிழர்களாலும் மாவீரர் நாளாகக் கொண்டாடப்படுகிறது. களப்பலியான முதல் புலி மாவீரனும் ஒரு வீரப் பரம்பரையைத் தொடங்கிய முன்னோடியுமான சங்கர். தமிழர் வாழும் நாடெல்லாம் வீடெல்லாம் நினைவு கூறப்படுகிறார். சங்கர் 1982 ஆம் ஆண்டு இறந்திருந்தாலும் 1989 ஆம் ஆண்டு முதலே மாவீரர் நாள் கொண்டாடப்படுகிறது.

விடுதலைப்போரின் ஆரம்ப காலகட்டத்தில், களப்பலியான வீரர்களின் உடல்கள் புதைத்தல், எரித்தல் என்ற இரு வகையாகவும் சிறப்பிக்கப்பட்டன. பெற்றோரின் மதநம்பிக்கை மற்றும் விருப்பத்துக்கு அமைவாகவும், போராளிகளின் வித்துடல்கள் எரிக்கப்பட்டும், புதைக்கப்பட்டும் வந்தன. பொது மயானங்களில் அப்போது போராளிகளின் வித்துடல்கள் தகனம் செய்யப்பட்டன அல்லது நல்லடக்கம் செய்யப்பட்டன.அத்தோடு சில சமயங்களில் போராளிகளின் உடல் எரிக்கப்படும் போது புகை எழும் திசையை வைத்து அவர்களின் மறைவிடங்களைக் கண்டறிந்து விடுவார்கள் என்ற காரணத்துக்காக ஆங்காங்கே காடுகள் தோறும் வித்துடல்கள் புதைக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராகப் பணியாற்றிய ராஜன், உயிரோடைத் தமிழ் வானொலிக்கு வழங்கிய செவ்வியின் போது, “1990 ஆம் ஆண்டு மாவீரர் நாள் தொடர்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் அறிக்கை பத்திரிகையிலும் எங்களுடைய புலிகளின்குரல் வானொலியிலும் வெளிவந்திருந்தது. அதைத் தொடர்ந்து அந்த உரை வெளிநாடுகளிலும் வெளிவந்தது.

அதேநேரம் பெற்றோர்களைக் கௌரவித்திருந்தோம். ஆலயங்களில் மணியோசை அடிக்கும் போது அனைவரும் வீடுகளில் விளக்கேற்றுமாறு கேட்டுக்கொண்டோம். இதைப் போலவே நாங்கள் 89 ஆண்டு 90 ஆம் ஆண்டுகளிலும் செய்திருந்தோம். 1991 ஆம் ஆண்டு நாங்கள் இவ்வாறு சுடலை ஒன்றைக் கட்டிவிட்டோம். அப்போது தான் புதுவை அண்ணை மாவீரர் துயிலும் இல்லம் என்னும் சொற்

தொடர்ச்சி▼



# மாவீரர்களின் வரலாற்றைக் கூறும் துயிலும் இல்லங்கள்...!

தொடர்ச்சி▲

பதத்தையும் கூறியிருந்தார். அந்தச் சொற்பதம் கூட்டத்தில் எல்லோருடைய கூட்டு முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் பின்னே 1991 ஆம் ஆண்டு மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் கொண்டாடும் மரபு உருவாகியது. என்று கூறியுள்ளார். இதன் போதே தீபம் ஏற்றுவதும், பாடல் பாடுவதும் தொடங்கப் பட்டது.

அதேநேரத்தில் மக்கள் மௌன அஞ்சலியையும் செலுத்தி, ஈகைச் சுடரை ஏற்றி அந்த சமாதிக்கு மேலே அவர்கள் விழுந்து தங்களுடைய பிள்ளைகளின் நினைவுகளை சத்தம் போட்டு அழுது, தங்களுடைய மனச்சுமையை குறைத்ததை பார்க்கக் கூடியதாகவும் இருந்ததாகவும் .

இதுவே மாவீரர் துயிலும் இல்லங்களில் வரலாறாகும் அமைகிறது. தற்போது மரபு வழியில் மக்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு பூப்போடுவதும் அதே நேரம் பாடசாலைகளிலிருந்த பிள்ளைகள் வந்து அதனைப் பார்ப்பதும் கிட்டத்தட்ட எமது எதிர்கால வரலாற்றைச் சொல்கின்ற வரலாற்று இடங்களை பார்ப்பதுபோல் பார்க்கின்ற ஒரு சூழலையும் இது ஏற்படுத்தியிருக்கிறது. அன்றும் சரி இன்றும் சரி ஒரு ஆலயத்தில் மக்கள் கடவுளுக்கு எப்படி மதிப்பைக் கொடுக்கிறார்களோ அப்படி ஒரு மரபை தோற்றிவிக்கிறது.

முதலாது துயிலும் இல்லம் கோப்பாயில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் கோப்பாய் துயிலுமில்ல மண்ணில் போராளிகளின் வித்துடல்கள் புதைக்கப்பட்டதோடு எரிக்கப்பட்டும் வந்தன. 1991 இல் வித்துடல்கள் எரிக்கப்படமாட்டாது, புதைக்கப்படும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. புதைப்பதால் அது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலைபெறும் என்று இத்தீர்மானம் எடுக்கப் பட்டது.

அதன்பின், முதன்முதலான கப்டன் சோலையின் வித்துடல் கோப்பாய் துயிலும் இல்லத்தில் 14 ஜூலை 1991 ஆம் நாள் விதைக்கப்பட்டுள்ளது.

வித்துடல் கிடைக்காமல் போனால் நினைவுக்கற்கள் நாட்டும் வழமையும் உண்டு. அதே சமயத்தில் வித்துடல் ஒரு துயிலும் இல்லத்திலும், அவருக்கான நினைவுக்கல் இன்னுமோர் துயிலும் இல்லத்திலும் வைப்பதும் இன்னுமொரு வழமையாகும்.

இலங்கையில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாயில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் என்பன உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம் என்பன உள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம்,விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லம், அளம்பில் மாவீரர் துயிலுமில்லம்,ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வன்னிவி ளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம் என்பன உள்ளன.

மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம், பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம், முள்ளிக்குளம் மாவீரர் துயிலுமில்லம் என்பன உள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம்-2018, மட்டக்களப்பு மாவட்டம், தரவை மாவீரர் துயிலுமில்லம், தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம், கண்டலடி மாவீரர் துயிலுமில்லம், மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லம் என்பன உள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், தியாகவனம் மாவீரர் துயிலுமில்லம்,பெரியகுளம் மாவீரர் துயிலுமில்லம், உப்பாறு மாவீரர் துயிலுமில்லம் என்பன உள்ளன.

மணலாற்றில் ஜீவன்முகாம் - உதயபீடம் மாவீரர் துயிலுமில்லம், கோடாலிக்கல் - புனிதபூமி மாவீரர் துயிலுமில்லம் என்பன உள்ளன.

வவுனியாவில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லம் உள்ளது.

இவ்வாறாக 20 இற்கும் மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்படுகின்றன. மாவீரரின் கல்லறை மற்றும் நினைவுக்கல் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை 20000 இற்கும் மேற்பட்டதாகும்.

இனத்தின் விடுதலைக்காய் மகத்தான தியாகங்களைப் புரிந்து ஈழப் போரிலே தம்முயிர்களை ஈந்த காவியநாயகர்களின் மாபெரும் தியாகங்கள் மூலமே மாபெரும் சாதனைகளைச் செய்ய முடியும் என்பது சான்றோர் வாக்கு. ஏறத்தாழ 40,000 வரையிலான மாவீரர்களை தமிழீழம் கண்டிருக்கிறது. மாவீரர் வரலாறு தியாக வரலாறாக இடம்பெறுகிறது. இதை விட வேறு விளக்கம் சொல்ல முடியாது.



# வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி தமிழகம் முழுவதும் தொடங்கியது

தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணி தொடங்கியுள்ளது.

வாக்காளர் பட்டியலில் தகுதியான வாக்காளர்கள் பெயர் இடம் பெறும் வகையிலும், இரட்டை பதிவுகள், இறந்தவர்கள் பெயர்களை நீக்கும் வகையிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை செயல்படுத்த தேர்தல் ஆணையம் முடிவெடுத்தது.

அதன்படி பிஹாரைத் தொடர்ந்து, தமிழகம், புதுச்சேரி, கேரளா உட்பட 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை மேற்கொள்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. தொடர்ந்து, ஒக்டோபர் 28 இல் முதல் கட்டப் பணிகள் தொடங்கின. அதன்படி பணிகளில் ஈடுபட உள்ள அலுவலர்களுக்கான பயிற்சி, அரசியல் கட்சிகளின் கருத்துக்கேட்புக் கூட்டம் ஆகியவை நடத்தப்பட்டன.

அதைத் தொடர்ந்து, ஏற்கெனவே வெளியிடப்பட்ட பட்டியல் அடிப்படையில், அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்புக்கான விண்ணப்ப படிவங்களை வழங்கி பூர்த்தி செய்து பெறும் பணி நேற்று தொடங்கியது. தமிழகம் முழுவதும் 77 ஆயிரம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தங்களுக்கு வழங்கப்பட்ட பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை, சரி பார்த்து வீடுவீடாகக் கணக்கெடுப்பு நடத்தும் பணிகளைத் தொடங்கினர்.

சில பகுதிகளில் வீடுவீடாகச் சரிபார்த்து, அலுவலர்கள் படிவங்களை வழங்கினர். சிலரிடம் பூர்த்தி செய்து உடனடியாக பெற்றனர். மற்றவர்களிடம் படிவங்களை வழங்கிச் சென்றனர். சென்னையில் 40 லட்சத்து 4 ஆயிரத்து 694 வாக்காளர்களுக்கு 3 ஆயிரத்து 718 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக கணக்கீட்டுப் படிவம் வீடுவீடாக வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில், வாக்காளர் கணக்கீட்டுப் படிவத்தை வழங்குவது தொடர்பாக வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

வாக்குச் சாவடி நிலை அலு வலர்களால் வழங்கப்படும் இரட்டை படிவங்களை, பொது மக்கள் முழுமையாகப் பூர்த்தி செய்து கையொப்பத்துடன், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மீண்டும் வரும்போது சமர்ப்பிக்க வேண்டும். படிவங்கள் அனைத்தும் டிசம்பர் 4 ஆம் திகதிக்குள் பெறப்படும்.

அவ்வாறு பெறப்படும் படிவங்களில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர் விவகாரத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்

## மக்களுக்கு செல்வப்பெருந்தகை அறிவுறுத்தல்




வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்) விவகாரத்தில் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை அறிவுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

சிறப்பு வாக்காளர் திருத்த பணிகள் தமிழகம் முழுவதும் தொடங்கியுள்ளன. தேர்தல் ஆணைய இணையதளத்தில் இருந்து 2003 ஆம் ஆண்டின் எஸ்.ஐ.ஆர். பட்டியல் நீக்கப்பட்டுள்ளது. வாக்காளர் திருத்தம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் திருத்த விவகாரத்தில் தமிழக மக்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

பல மாநிலங்களில் வாக்கு திருட்டு நடந்துள்ளது. விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கொடுத்தால் மட்டும் போதாது, நீங்கள் சேர்ப்பதற்காக கொடுத்த பெயரை நீக்கி விடவும் வாய்ப்பு உள்ளது. மக்களின் வாக்குரிமையை பறிக்க மோடி அரசு முயற்சிக்கிறது. அதனால் நம்முடைய வாக்குரிமையை யாரும் பறிப்பதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது.

தமிழக மக்கள் கவனமாக இருக்க வேண்டும். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் முறையாக மேற்கொள்ளப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய காங்கிரஸ் சார்பில் மாவட்டம் வாரியாகவும் சென்னை சத்தியமூர்த்தி பவனிலும் 'வார் ரூம்' அமைக்கப்படும்." என்று தெரிவித்தார்.



# பிலிப்பைன்ஸைத் தாக்கிய 'கல்மேகி' புயல் 66 பேர் உயிரிழப்பு; பலரைக் காணவில்லை

பிலிப்பைன்ஸை தாக்கிய 'கல்மேகி' புயல் காரணமாகக் குறைந்தது 66 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் பலர் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

புயல் காரணமாக 5 லட்சத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில், மீட்பு பணியில் ஈடுபட்ட ஹெலிக்கொப்டரில் ஆறு இராணுவ வீரர்களும் உள்ளடங்குவர்.

அதிகமான மக்கள் வீட்டுக் கூரைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் எனவும் அவர்களை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகரித்து வரும் புயல் காரணமாக மீன் பிடி நடவடிக்கைகளுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் கிட்டத்தட்ட 100 துறைமுகங்களில் 3,500 இற்கும் மேற்பட்ட பயணிகள் மற்றும் சரக்கு லொறி ஓட்டுநர்கள் சிக்கித் தவிக்கின்றனர் என அந்நாட்டுக் கடலோர காவல் துறை தெரிவித்துள்ளது.

மேலும் 186 உள்நாட்டு விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள் என என தெரிவிக்கப்படுகிறது.

# நியூயோர்க் நகரின் மேயராக சொஹ்ரான் மம்தானி தெரிவு

அமெரிக்காவின் நியூயோர்க் நகர மேயராக சொஹ்ரான் மம்தானி (வயது 34) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நியூயோர்க் நகரத்தின் முதல் முஸ்லிம் மேயர் என்ற வரலாற்றுச் சாதனையை படைக்கவுள்ளதுடன், 1892 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தெரிவாகும் மிக இளைய மேயர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

உகண்டாவில் கம்பாலவில் பிறந்த சொஹ்ரான் மம்தானி, நியூயோர்க் நகர மேயராக தெரிவாகும் முதல் ஆபிரிக்கர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகர மேயர் பதவிக்கு ஜனநாயகக் கட்சியின் சார்பாக இந்திய – அமெரிக்கரான சொஹ்ரான் மம்தானி, குடியரசுக் கட்சியின் சார்பாக கர்டிஸ் ஸ்லிவா, முன்னாள் ஆளுநர் ஆண்ட்ரூ குவோமோ ஆகியோர் போட்டியிட்டனர்.

ஒக்டோபர் 25 ஆம் திகதி தொடங்கிய வாக்குப்பதிவின் முடிவில் ஸோரான் மம்தானி வெற்றி வெற்றி பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.




அதுமட்டுமின்றி, 1969ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிகளவிலான வாக்குகளாக 20 லட்சம் வாக்குகள் பதியப்பட்டதாக இந்தத் தேர்தல் அமைந்துள்ளது.

34 வயதே ஆன சொஹ்ரான் மம்தானி, இந்திய திரைப்பட இயக்குநர் மீரா நாயரின் மகனாவார்.


சொஹ்ரான் மம்தானியின் தந்தை முகமது மம்தானி, 1946 இல் அப்போதைய பம்பாய் நகரில் பிறந்தவர்.

மம்தானி வென்றால் நியூயோர்க் பேரழிவை சந்திக்கும் என ஜனாதிபதி ட்ரம்ப் விமர்சித்திருந்தார். நியூயோர்க் மேயர் தேர்தல் முடிவு ட்ரம்ப் ஆட்சிக்கு எதிரான மக்களின் மனநிலையை காட்டுவதாக உள்ளது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

புதன்கிழமை 05/11/2025



இனிப்புப் பொதியில் தங்க மோதிரம்!

C2



# கியூபெக் மாகாணத்தின் மொன்றிஸ் நகர சபைக்கு யாழ். பூர்வீகப் பெண் மிலானி தியாகராஜா தெரிவு

கனடாவின் கியூபெக் மாகாணத்தின் மொன்றிஸ் நகர சபைக்கு யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட மிலானி தியாகராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மொன்றியல் நகரில் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக நகர சபைக்கு தெரிவான முதல் தமிழ் பெண் அரசியல்வாதி மிலானி தியாகராஜா.

கனடா சேவை மையத்தில் பல ஆண்டுகளாகப் பணியாற்றிய இவர், மக்களுக்கு சேவை செய்வதில் நீண்ட அனுபவம் பெற்றவர்.

யாழ்ப்பாணம்நல்லூரைபூர்வீகமாகக்கொண்ட சட்டத்தரணியான லிங்கராஜா தியாகராஜா மற்றும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த பாமதி சிவபாதம் ஆகியோரின் மகளே மிலானி தியாகராஜா.

C2



# வெளிநாட்டவருக்கான தற்காலிக விசாவை ரத்து செய்வதற்கு கனடா அரசு தீர்மானம்

வெளிநாட்டினருக்கு வழங்கப்பட்ட தற்காலிக விசாக்களை ரத்து செய்ய கனடா அரசு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கனடாவின் உள்கட்டமைப்பு வசதியானது உள்நாட்டினருக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகின்றது.

இந்தநிலையில், கனடா அரசும் இதுதொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில், இதில் 2025 ஒகஸ்ட் மாதத்தில் கனடாவில் படிப்புக்காக விண்ணப்பித்த இந்திய மாணவர்களின் விண்ணப்பங்கள் சுமார் 74 வீதம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, கடந்த ஆண்டும் அதிக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், 2023 இல் நிராகரிப்பு விகிதம் 32 வீதம் என்பதுடன் 2023 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை இந்தாண்டு மிகவும் குறைவு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், படிப்புக்காக என தெரிவித்து கனடாவுக்குச் செல்ல விண்ணப்பிக்கும் மோசடியும் அங்கு அதிகரித்து வருவதால் அதனைத் தடுக்க கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இனிப்புப் பொதியில் தங்க மோதிரம்!



கனடாவின் வின்னிபிக் பகுதியில் ஹாலோவின் இனிப்பு பண்டங்கள் காணப்பட்ட பொதியில் தங்க மோதிரம் ஒன்று, பெண்ணுருவருக்கு கிடைத் துள்ளது .

தனது மகளின் ஹாலோவின் இனிப் புப் பண்ட பொதியில் இவ்வாறு தங்க மோதிரம் ஒன்றை கண்டெடுத்ததாக சிமோன் ஹில்ட்பிராண்ட் த்தீசன் என்ற பெண் தெரிவித்துள்ளார்.

தனது மகளுக்கு கிடைக்கப்பெற்ற இனிப்பு பண்டங்களை வீட்டின் அறை யில் பிரித்து வகைப்படுத்திய போது அதில் தங்க மோதிரம் ஒன்று இருப்பதை அந்தப் பெண் அவதானித்துள்ளார்.

யாரோ ஒருவருடைய திருமண மோதி ரம் என்பதையும் அவர் ஊகித்துள்ளார்.

பின்னர் இந்த மோதிரத்தை உரிய வரிடம் சேர்க்க வேண்டும் என தான் கருதியதாக பெண் குறிப்பிட்டுள்ளார்.

பெறுமதியான இந்த மோதிரம் வேறொ ருவரின் கைகளில் செல்லக்கூடாது என்பதற்காக மிகவும் குறைந்த விப ரங்களை உள்ளடக்கி சமூக ஊடகத்தில் மோதிரம் பற்றிய ஒரு பதிவிட்டுள்ளார்.

முகநூலில் இந்த பதிவு இடப்பட்டு சில மணித்தியாலங்களில் ஒருவர் தங்களது சகோதரரின் மோதிரம் தொலைந்து விட்டதாக தகவல் அனுப்பி வைக்கப்பட்ட தாகத அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

இந்த மோதிரம் பற்றிய தகவல்களை மேற்படி நபர்கள் சரியாக வழங்கிய தன் காரணமாக மோதிரம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியதாகவும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

# வலி நிவாரணி மருந்துகளுக்கு கனடாவில் பெரும் தட்டுப்பாடு

கனடாவில் ஒக்சிகோடைன் (Oxycodone) கலந்த வலி நிவாரணி மருந்துகளின் பற்றாக்குறை அடுத்த ஆண்டுவரை நீடிக்கும் என மருந்தக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

அதே சமயம், கோடீன் (Codeine) கலந்த மற்றொரு வகை வலி நிவாரணி மருந்துகளின் விநியோகம், கோவிட காலத்தில் ஏற்பட்ட தேசிய அளவிலான தடங்கலுக்குப் பின்னர், தற்போது மேம் பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகி றது.

கடந்த ஜூலை மாதம், ஆக்சிகோ டைன் மற்றும் அசிடமினோஃபென் (Acetaminophen) கலந்த மருந்து களான பலரும் அறிந்த பெயரான பெர் கோசெட் (Percocet) உள்ளிட்டவை



பற்றாக்குறை குறித்த அறிவிப்பை கனடிய சுகாதார திணைக்களம் வெளி யிட்டது.

இதனுடன், டைலனோல் 3 (Tylenol 3) என அறியப்படும் கோடீன் கலந்த மருந்துகளிலும் பற் றாக்குறையாக காணப்பட்டது. இந்த பிரச்சனை உற்பத்தி தடை காரண மாக ஏற்பட்டதாகவும், தொடக்கத்தில் இது இலையுதிர் காலத்துக்குள் சரியாகும் என எதிர்பார்க்கப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டது.

இம்மருந்துகள் திடீர் காயங்கள் முதல் நீண்டகால முதுகுவலி வரை பல்வேறு நோய்களுக்கு வழங்கப்படு கின்றன. கோடீன் கலந்த டைல னோல் 3 போன்ற மருந்துகள் மீண்டும் கிடைக்கத் தொடங்கியுள்ளன.

ஆனால் டைலனோல் 2 மற்றும் 4 மருந்துகளின் விநியோகம் இன் னும் குறைவாகவே உள்ளதாக கனடிய மருந்தாளுநர் சங்கத்தின் தொழில்முறை விவகாரங்களுக்கான மூத்த இயக்குநர் சதாஃப் ஃபைசல் தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில், ஒக்சிகோடைன் கலந்த மருந்துகளின் பற்றாக்குறை தொடர்ந்துகொண்டிருக்கிறது.

---

**கியூபெக் மாகாணத்தின்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவின் கோட் டெஸ்-நெய்ஜ் பகுதியில் பிறந்து வளர்ந்த மிலானி தியாகராஜா தமது கடின முயற்சியால் இந்நிலைக்கு உயர்ந்துள்ளார்.

தனது வெற்றியையடுத்து ஊடகங் களுக்கு கருத்துத் தெரிவித்த மிலானி தியாகராஜா,

“இது ஒரு வெற்றி மட்டுமல்ல, ஒரு புதிய தொடக்கம். டார்லிங்டனில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரின் குரலும் மதிக்கப்படும், பிரதிநிதித்துவப்படுத் தப்படும் என்பதை உறுதிசெய்கிறேன்.

நமது சமூகத்தின் இணைப்பை வலுப்படுத்தியே இந்தப் பணியை மேற் கொள்வேன்.

நகரத்தின் தூய்மை மற்றும் பாது காப்பை உறுதிசெய்தல், மக்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படைத் தேவை களை பூர்த்திசெய்தல். வீடற்றவர்க ளின் பிரச்சினைகளை தீர்க்கவும் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.” என்றார்.




# கனடாவின் யூகான் மாகாணத்தின் புதிய முதல்வராக கரி டிக்சன் தெரிவு

கனடாவின் யூகான் மாகாணத்தின் புதிய முதல்வராக கரி டிக்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேர்தலில் யூகான் கட்சி பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுள்ளது. இதன் மூலம் கட்சித் தலைவர் கரி டிக்சன் யூகானில் முதல்வராக பதவியேற்கவுள்ளார்.

இது மாற்றத்திற்காக யூகான் மக்களால் வழங்கப் பட்ட தெளிவான தீர்ப்பு என டிக்சன் வெற்றியின் பின்னர் குறிப்பிட்டார்.

"“மக்கள் மாற்றத்தை விரும்பினர். வீடமைப்பு நெருக் கடியை தீர்க்கவும், மக்கள் தொகை வளர்ச்சியுடன் இணைந்த சுகாதார அடுக்கமைப்பை உருவாக்கவும், யூகானில் எந்த சமூகத்திலும் வாழும் ஒவ்வொருவருக்கும் தேவையான சுகாதார சேவையை வழங்கவும் அவர்கள் எதிர்பார்த்தனர்.” என அவர் குறிப்பிடடுள்ளார்.

“வைற்ஹோர்ஸ் நகர மையப் பகுதியை சுத்தப் படுத்தும் நடவடிக்கைகள், குற்றவாளிகளை பொறுப் பேற்கச் செய்வதற்கான நீதித்துறை மாற்றங்கள், மற்றும் தனியார் துறையின் வளர்ச்சியை முன்னுரிமைப் படுத்துவது போன்றவை புதிய அரசின் முக்கிய இலக்கு கள்.” எனவும் குறிப்பிட்டுள்ளார்.

“எங்கள் பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் கொண்டு வருமாறு மக்கள் வாக்களித்துள்ள னர்.” என்றும் டிக்சன் கூறியுள்ளார்.